ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/59 - 2022 ජුනි මස 03 වැනි සිකුරාදා - 2022.06.03

*2282/59 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

*கொழும்பு 01,*
*2022, மே 31.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு முழுமையாகச் சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட/கூட்டிணைக்கப்பட்ட (அதாவது முதலீட்டாளர்) கூட்டு தொழில்முயற்சிக்கு, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்குட்பட்டு, கொழும்பு துறைமுக நகரில் நிதிகளை முதலீடு செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களிலிருந்து கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

1A - PG 5860 — 456 (2022/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. கொழும்பு துறைமுக நகரிலுள்ள முதலீடுகளுக்கு பெறுகைகளை வழிப்படுத்துவதற்கும் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு செலுத்தப்படத்தக்க அத்தகைய முதலீடுகளின் வருமானத்தினை அல்லது மூலதனப் பெறுகைகளைத் திருப்பி அனுப்புவதற்குமாக இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு, முதலீட்டாளர் இலங்கையிலுள்ள அதிகாரம்பெற்ற வணிகர்களுடன் "கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர்" கணக்கினைத் திறக்கலாம்.

4. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், கொழும்பு துறைமுக நகரில் நிறுவப்பட்டுள்ள முதலீட்டினைப் பெறுபவர், இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்குட்பட்டு, இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் திறந்திருக்கும் "கொழும்பு துறைமுக நகர முதலீட்டுக் கணக்கு - முதலீட்டாளர்" கணக்கிற்கு வரவு வைப்பதற்காக முதலீட்டுப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக -

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"கூட்டுச் தொழில்முயற்சிகள்" என்பது, வதிகின்ற அல்லது வதிவற்ற பங்குடைமையாளருக்குச் சொந்தமான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள முதலீட்டு நோக்கத்திற்காக வதியும் மற்றும் வதிவற்ற ஆட்களுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கூட்டுத் தொழில்முயற்சிகள் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

EOG 06-0055

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.